செ. கு. எண்: 126 நாள்: 08.09.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 8.9.2016

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கரைசுத்து உவரி மஜ்ரா, பரதர் உவரி கிராமத்தில் நடைப்பெற்ற அன்னை வேளாங்கன்னி மாதா கோவில் திருவிழாவை முன்னிட்டு நடைப்பெற்ற சப்பர பவனியின் போது, உயர் மின் அழுத்த கம்பியின் மீது சப்பரம் உரசியதில் மின்சார விபத்து ஏற்பட்டு, சம்பவ இடத்திலேயே நான்கு நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த இராதாபுரம் வட்டம், பரதர் உவரி பகுதியைச் சேர்ந்த திரு. நெல்சன் என்பவரின் மகன் திரு. ராஜ், திரு. ஜோன் என்பவரின் மகன் திரு. க்ளைவ், திரு. தாசன் என்பவரின் மகன் திரு. ராஜா மற்றும் திரு. ஜெலஸ்பின் என்பவரின் மகன் திரு. நிமோ ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் 24 பேர் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

இந்த விபத்து பற்றிய தகவல் அறிந்தவுடன், செய்தித் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலட்சுமி மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரை உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்குமாறும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை சந்தித்து அவர்களுக்கு உயரிய மருத்துவ சிகிச்சை வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறும் நான் ஆணையிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/-ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.